செ.வெ.எண்.22 நாள்.10.01.2018

திருநெல்வேலி மாவட்டத்தில், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் குடியரசு தின விழா கொண்டாடுதல்– அனைத்துறை அலுவலர்களுடனான முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் – மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

––––––––

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், குடியரசு தின விழா கொண்டாடுதல் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.01.2018) தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் இந்த ஆண்டு குடியரசு தின விழா நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட வேண்டும். காவல் துறையினர் அணிவகுப்பு மற்றும் விழா நடைபெறும் திடலில் பாதுகாப்பு ஏற்பாடு செய்தல் மற்றும் போக்குவரத்து சரிசெய்திடவும், மாநகராட்சி அலுவலர்கள் ஆயுதப்படை மைதானத்தில் சுற்றிலும் சுண்ணாம்பு பொடி தூவி தூய்மையான நிலையில் வைத்திடவும், தேவையான எண்ணிக்கையில் தற்காலிக கழிப்பிடங்களை வைத்திடவும், வருவாய்த் துறையினர் சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்க தேவையான அனைத்து ஏற்பாடுகளை செய்திடவும், விழா அரங்கில் வாழை தோரணங்கள் அமைத்திடவும், ஒலி பெருக்கி மின் சாதனங்கள் ஏற்பாடு செய்திடவும், பொதுப்பணித் துறையினர் விழா மேடைக்கான பந்தல் அமைத்து பார்வையாளர்கள் அமர்வதற்கான சாமியானா பந்தல்களை சரியான முறையில் அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்வித் துறையினர் பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து, நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசு வழங்க ஏற்பாடு செய்திட வேண்டும். தீயணைப்புத் துறையினர் போதுமான பணியாளர்களுடன் தீயணைப்பு வண்டிகளை தயார் நிலையில் வைத்திடவும், சுகாதாரத் துறையினர் மருத்துவக் குழுவினரை தயார் நிலையில் வைத்திட வேண்டும். அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து குடியரசு தினவிழாவினை சிறப்பாக கொண்டாட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.முருகானந்தம், மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.ஹெட்ஸி லீமா அமளினி, இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.பெருமாள் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பழனிகுமார், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.இந்திரா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.